தமிழ்நாட்டுத்

# திலகங்கள்

தி. இராமாநுஜன்

எழுதியது

FREE READING ROOM
AND
LIBRARY
(ESTD. 1936)
ROYAPURAM.

சென்னை:

கஸ்தூரி அண்டு கம்பெனி

பார்க் டவுன்

1932

ரெஜிஸ்தர் செய்தது]

[இதன் விலை அணா 3



PRINTERS:
TIRUPATI SRI MAHANT'S PRESS
21, ANDERSON STREET,
MADRAS

5904 a

FREE READING ROOM AND LIBRARY (ESTD. 1938) ROYAPURAM

இப்புத்தகம்

என் அருமை ஆசிரியரும்

கல்வித் துறையில் என்னைச் சிறக்கச் செய்தவரும்

என்னிடம் நீங்கா அன்பு கொண்டவரும்

ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும்

ஒருங்கே வாய்ந்தவருமாகிய

**திரு. G. தாமோதர முதலியார், *B. A., L. T.,***

**(District Educational Officer)**

அவர்களுக்கு உரிமையாக்கப்பட்டது



# FOREWORD

I must congratulate the author on having written this book on the biographies of the three noteworthies of our land, Pachiappa Mudaliar, Sir T. Muthuswamy Iyer and Poondi-Ranganadha Mudaliar. The lessons of their noble and selfless lives which are well presented will, I am sure, exercise a potent influence on the life and conduct of the coming generation. The book deserves a conspicuous place in the Tamil World.

**T. V. Apparsundara Mudaliar,**

MADRAS 30-12-31 — *M. A., L. T., M. Ed.* (*Leeds*),
(Dt., Educational Officer.)

# முன்னுரை

'நமது அருமைச் சிறுவர்கள் அழியாப் புகழ் பெற்ற நமது நாட்டுப் பெருமக்களின் சரிதங்களை மேற்போக்காக வேனும் தங்கள் இளம் பருவத்தில் அறிவது அவர்களின் நன்மைக்கு அடிப்படையான செயலாகும்,' என்பது இராஜதானிக் கல்லூரியின் பிரபல கணித சாஸ்திர போதகாசிரியராகவும், சென்னை ஷெரிபாகவும், சென்னைக் 'கார்ப்பரேஷன்' பிரபல அங்கத்தினராகவும், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் தேர்ச்சியுடையவராகவும், அரசாங்க மொழி பெயர்ப்பாளராகவும், தர்க்கம் தேச சரித்திரம் முதலியவைகளில் வல்லவராகவும், சர்வ கலாசாலையின் அங்கத்தினராகவும் இருந்த பேரறிவாளர் பூண்டி அரங்கநாத முதலியார் அவர்களுடைய கருத்தாகும்.

அப்பெரியாரின் வார்த்தையைப் பொன்னே போலப் போற்றி நான் சிறுவர்களுக்கென 'தமிழ் நாட்டுத் திலகங்கள்' என்னும் இச்சிறு நூலை எழுதினேன். இதில் தரும பிதாவாகிய காஞ்சிப்புரம் பச்சையப்ப முதலியார், ஊக்கத்திற்குத் தந்தைபோன்றவராகிய திருவாரூர் சர். முத்துசாமி ஐயர், அறிவிற் சிறந்த அண்ணலாராகிய பூண்டி அரங்கநாத முதலியார் ஆகிய மூன்று பெருமக்களின் சரிதங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. இச்சரிதங்களில் சிறுவர்களுக்கு வேண்டாப் பகுதிகள் நீக்கப்பட்டுச் சிறு சிறு வாக்கியங்களில் எவ்வளவு சுலபமாகச்சொல்ல முடியுமோ அவ்வளவு சுலபமாக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

கல்வி 'இலாக்கா' அதிகாரிகளும், அறிவிற் சிறந்த பெருமக்கள் பலரும் இப்புத்தகத்தின் நலமுணர்ந்து இதை மாணவர்களுக்குப் பயன்படுமாறு செய்வார்கள் என்று நம்புகின்றேன்.

தி. இராமாநுஜன்

# விஷய அட்டவணை

## 1. பச்சையப்ப முதலியார்


அத்தியாயம் பக்கம்

1. பெற்றோரும் இளமைப் பருவமும் ... ... 7
2. பச்சையப்பரது முயற்சி ... ... 12
3. வேறு பல விஷயங்கள் ... ... 18


## 2. சர். தி. முத்துசாமி ஐயர்


1. பெற்றோர்களும் இளமைப்பருவமும் ... ... 22
2. ஐயர் அவர்களின் முன்னேற்றம் ... ... 26
3. ஐயர் அவர்களின் பெருமை ... ... 31


## 3. பூண்டி - அரங்கநாத முதலியார்


1. பெற்றோரும் இளமைப்பருவமும் ... ... 37
2. கல்வி அபிவிருத்தி ... ... ... 39
3. உத்தியோகம் வகித்தல் ... ... ... 42

# தமிழ் நாட்டுத்
# திலகங்கள்

## 1. பச்சையப்ப முதலியார்

### 1. பெற்றேரும் இளமைப் பருவமும்

இந்த உலகில் அநேகர் தருமம் செய்து பெரும் புகழ் அடைந்து இருக்கின்றார்கள். நமது இந்திய நாடு ஆதிகாலமுதல் தருமம் செய்வதில் பெருமை பெற்று இருக்கின்றது. நமது தென்னிந்தியாவில் அநேகர் தானதருமங்கள் செய்து இருக்கின்றனர். அவர்களில் சிறப்பாகக் காஞ்சிப்புரம் பச்சையப்ப முதலியாரைச் சொல்லலாம்.

காஞ்சிப்புரம், செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றுக்கு அருகில் இருக்கின்றது. இந்த நகரம் மிகவும் பழமையானது. இங்குப் பல கோயில்கள் இருக்கின்றன. இந்த நகரம் நெசவுத் தொழிலுக்குப் பேர் பெற்றது.

இந்த நகரத்தில் பல வருஷங்களுக்கு முன்னே விசுவநாத முதலியார் என்னும் பெயருள்ள பெரியவர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் பூச்சியம்மாள் என்பது. கணவரும்,

மனைவியாரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நாளடைவில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. அந்தக் குழந்தைகளில் ஒன்றின் பெயர் சுப்பம்மாள் என்பது; மற்றொன்றின் பெயர் அச்சம்மாள் என்பது. நெடுநாள் வரையில் விசுவநாத முதலியாருக்கும், பூச்சியம்மாளுக்கும் நாம் மேலே கூறிய இரண்டு பெண்குழந்தைகளைத் தவிர வேறு குழந்தைகள் ஒன்றும் பிறக்கவில்லை. ஆகவே கணவரும், மனைவியாரும் கடவுளை நோக்கித் தங்களுக்கு ஓர் ஆண் மகவைக் கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். கடைசியில் கடவுளுடைய திருவருளால் பூச்சியம்மாள் கருப்பமுற்றார். பூச்சியம்மாள் கருப்பவதியாயிருக்கும்போது விசுவநாத முதலியார் நோய் கண்டு இறந்து விட்டார். தம்முடைய கணவர் இறந்துவிடவே பூச்சியம்மாள் மிகவும் துன்பம் அடைந்தார். அவர் என்ன செய்வதென்று தெரியாமல் வருந்தினார்.

விசுவநாத முதலியாருக்குச் சென்னைக்கு வடமேற்கே இருபத்தைந்து மைல் தூரத்தில் உள்ள பெரிய பாளையம் என்னும் கிராமத்தில் ஒரு சிநேகிதர் ஏற்பட்டு இருந்தார். அந்தச் சிநேகிதருடைய பெயர் ரெட்டிராயர் என்பது. அவர் மாத்துவப் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் ஆறுகாடு நவாப்பின் சுபேதாருடைய பிரதிநிதியாகப் பெரிய

பாளையத்தில் அதிகாரம் செலுத்திக் கொண்டு இருந்தார். ஆகவே கணவரை இழந்த பூச்சியம்மாள் தமது இரண்டு பெண்களுடன் அவர் இடம் போய் அவருடைய ஆதரவில் கொஞ்சக்காலம் இருந்தார். இவ்வாறு இருக்கையில், விசுவநாத முதலியார் இறப்பதற்கு முன்னுலேயே கருப்பவதியாய் இருந்த பூச்சியம்மாள் ரெட்டி ராயருடைய இல்லத்தில் 1754-ஆம் வருஷத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அந்தக் குழந்தையே இப்போது உலகம் புகழும் பச்சையப்ப முதலியார் என்று அறிக.

பச்சையப்ப முதலியாருக்கு ஐந்து வயது ஆயிற்று. ரெட்டிராயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அவருக்குத் தெலுங்கு பாஷையைக் கற்பிக்கலானுர். பச்சையப்ப முதலியாரும் தெலுங்கு பாஷையைக் கற்று வந்தார். அப்போது ரெட்டி ராயர் திடீரென்று இறந்துவிட்டார்.

ரெட்டிராயர் இறந்துவிடவே பூச்சியம்மாளுக்கு அதிக கஷ்டம் ஏற்பட்டது. அந்த அம்மையாரை ஆதரிக்கக் கூடியவர் ஒருவரும் இல்லை. ரெட்டிராயருடைய மனைவியாரான வேங்கடம்மாளும் கஷ்ட நிலையை அடைந்தார். ஆகவே அந்த அம்மையார் பூச்சியம்மாளுக்குத் தகுந்த தேறுதல் கூறி அவரைச் சென்னைக்கு அனுப்பினுர்.

பூச்சியம்மாள் தம் இரண்டு குமாரத்திகளை யும், பச்சையப்பரையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னையில் அந்த அம்மையார் கோட்டை மைதானத்திற்கு வடமேற் குத் திக்கில் இருக்கும் ஒற்றைவாடைக்கருகில் சாமி மேஸ்திரி வீதி என்னும் ஒரு சிறிய தெருவில் வசித்துவர ஆரம்பித்தார். அங்கு அந்த அம்மை யார் வசித்துக் கொண்டு வருகையில் அந்தத் தெரு வில் வசித்துக் கொண்டு இருந்த ஒருவன் அந்த அம்மையாருக்குத் தன் எஜமானருடைய குண விசேஷங்களை எடுத்துக் கூறி அவரை அண்டினால் அவர் தம்மாலான உதவிகளைச் செய்யமுன் வரு வார் என்றும் தெரிவித்தான். அந்த அம்மையா ருக்கு அவன் கூறிய விஷயம் முறையானதென்று மனத்தில் பட்டது. படவே அந்த அம்மையார் அவனுடைய எஜமானரைக் கண்டு அவரிடம் தம் குறைகளைச் சொல்லிக்கொண்டார். அவர் அந்த அம்மையாருடைய குறைகளைக் கேட்டு அந்த அம் மையாருக்குத் தேறுதல் கூறினார். இத்தகைய கன வானுடைய பெயர் பௌனி-நாராயணப் பிள்ளை என்பதாகும். இவர் தம்மை அடுத்தவரைக் காப்பாற் றும் சிறந்த குணம் உள்ளவர். ஆகவே இவர் தம்மை அண்டின பூச்சியம்மாள் விஷயத்திலும் கருணை காட்டி அந்த அம்மையாரைத் தம் உடன் பிறந்த சகோதரியாகப் பாவித்து அந்த அம்மை

யாருக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து வரலானுர். இவர் சிறந்த தருமசீலர்; தமக்கு ஆறுகாடு நவாபிடமிருந்து கிடைத்த மெதவாயல் என்னும் கிராமத்தை அந்தக் கிராமத்திலுள்ள தரும சத்திரத்திற்கு உபயோகமாகும்படி 'உயில்' எழுதி வைத்தார்.

பிள்ளையவர்கள் பச்சையப்பருக்குக் கல்வி கற்பித்தார். இன்னும் பச்சையப்பரை முன்னுக்குக் கொண்டுவரக் கூடியவழிகளில் அவர் பாடுபட்டார். பச்சையப்பரும் பிள்ளை அவர்கள் இடத்தில் பக்தி விசுவாசத்துடன் நடந்து வந்தார். பிள்ளையவர்களுக்குப் பச்சையப்பர் இடத்தில் அளவுகடந்த அன்பு ஏற்பட்டு இருந்தது.

பச்சையப்பருக்குச் சுப்பம்மாள், அச்சம்மாள் என்ற இரண்டு சகோதரிகள் இருந்தார்கள் அல்லவா ? அவர்களுக்குக் கலியாணஞ் செய்து வைக்க வேண்டிய காலம் வந்தது. பச்சையப்ப முதலியாரின் மூத்த தமக்கையாரான சுப்பம்மாள் என்பவர் புங்கத்தூர் தெய்வநாயக முதலியார் என்பவரைக் கலியாணஞ் செய்து கொண்டார். அந்தச் சுப்பம்மாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் அய்யாளம்மாள் என்பது. சுப்பம்மாளுடைய கணவர் திடீரென்று இறந்து விட்டார். ஆகவே அந்த அம்மாள் தம் குமாரத்தியான அய்யாளம்மாளை தம்மோடு

அழைத்துக் கொண்டு தம் சொத்துக்களுடன் தம் தாய் வீடு வந்து சேர்ந்தார். பச்சையப்ப முதலியாருடைய இரண்டாவது தமக்கையாரான அச்சம்மாள் கூடலூர் தெய்வநாயக முதலியாரைக் கலியாணஞ் செய்து கொண்டார். அந்த அம்மாளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெயர் முத்தையா முதலியார் என்பது. அச்சம்மாள் திடீரென்று இறந்து விட்டார்.

## 2. பச்சையப்பரது முயற்சி

பச்சையப்பர் வாலிப பருவத்தை அடைந்தார். அவர் ஒரு பீங்கான் கடையில் 'தரகு' வேலையில் அமர்ந்தார். பச்சையப்பருக்கு இளம் வயது முதற்கொண்டே பல நற்குணங்கள் ஏற்பட்டு அவை அவருடைய வயதுடன் கூடவே வளர்ந்து கொண்டு வந்தன. ஆகவே அவரிடத்தில் வியாபாரிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் அதிக நம்பிக்கை ஏற்பட்டு இருந்தது. ஆகவே பச்சையப்பர் நாளடைவில் தம் தொழிலின் மூலம் அதிக செல்வத்தைத் திரட்டக் கூடியவரானார். பொருள் சேர்ப்பதோடு நின்று விடாமல் அவர் தாம் திரட்டிக்கொண்டு வந்த செல்வத்தைப் பலருக்கும் தருமம் செய்து வந்தார்.

பச்சையப்பர் இவ்வாறு இருந்து வருகையில் அவருக்கு ஓர் இராணுவ உத்தியோகஸ்த

ருடைய சிநேகம் ஏற்பட்டது. ஏற்படவே பச்சையப்பருக்கு இராணுவத்தில் சேரவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆகவே அவர் ஒருவருக்கும் சொல்லாமல் இராணுவத்தில் சேர்ந்து பாலவாயல் என்னும் இடத்திற்குச் சென்றார். உடனே நாராயணப் பிள்ளை அவர்கள் இராணுவத் தலைவரைக் கண்டு பச்சையப்பரை இராணுவத்தில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி அந்த உத்தியோகஸ்தர் பச்சையப்பரை அவருடன் அனுப்பிவிட்டார். பிறகு பச்சையப்பர் முன்போலவே தரகு வேலையில் ஈடுபட்டுத் தம் புத்திசாதுரியத்தினால் அளவற்ற பொருளைச் சம்பாதித்துத் தான தருமங்களைச் செய்து மிகுந்த பொருளைப் பிள்ளை அவர்களிடத்தில் கொடுத்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில் பௌனி-நாராயணப் பிள்ளையவர்கள் பச்சையப்பருக்கு விவாகஞ் செய்து வைக்க வேண்டும் என்று எண்ணி அவருக்கு அவருடைய தமக்கையின் குமாரத்தியான அய்யாளம்மாளைக் கலியாணஞ் செய்து வைத்தார். பச்சையப்பரும், அய்யாளம்மாளும் ஒற்றுமையாய் வாழ்க்கையை நன்றாய் நடத்தி வந்தார்கள்.

பச்சையப்ப முதலியார் அழகும், கம்பீரமும் வாய்ந்த உருவம் உள்ளவர். அவர் அக்காலத்துப்

பெரிய மனிதர்களைப்போலவே தாமும் தலையில் பாகையும், உடலில் நீண்ட அங்கியும், இடையில் சரிகை நடுக்கட்டும் உள்ளவராய்க் கையில் சிவப்பு உருமால் ஒன்றைப் பிடித்து உடம்பில் சால்வை போர்த்துக்கொண்டு பல்லக்கில் ஏறிச்செல்வார். அக்காலத்துப் பெரிய மனிதர்களெல்லாம் பல்லக்கிலேயே ஏறிச்செல்வது வழக்கமாய் இருந்தது. பச்சையப்பர் தம்முடைய காதில், பெரிய கடுக்கனும், பச்சைக்கல் முருகும் அணிந்து இருந்தார். கழுத்தில் அவர் இரத்தன மாலையும், கையில் தோடாவும், விரலில் மோதிரமும் அணிந்திருந்தார். அவருடைய புஜத்தின் நடுவில் நான்கு விரற்கடை சதுரமுள்ள மச்சம் ஒன்று இருந்ததாகத் தெரிகின்றது. அந்த மச்சமே அவருடைய செல்வம் அனைத்திற்கும் மூலகாரணமாக இருந்து வந்த தென்று ஜனங்கள் நம்பி யிருந்தார்கள்.

பச்சையப்பரிடம் எல்லாவித நல்ல குணங்களும் பொருந்தி இருந்தன. தருமத்தில் அவரைக் கர்ணனுக்குச் சமானமாகச் சொல்லலாம். அவரிடம் மதத்துவேஷம் சிறிதும் இல்லை.

பச்சையப்ப முதலியாருடைய காலத்தில் தென்னிந்தியாவில் நிலையான அரசாட்சி ஏற்பட்டிருக்க வில்லை. எங்கும் கலகங்களும், குழப்பங்களுமே நிறைந்திருந்தன. கொள்ளைகளும் ஏராளமாக நிறைந்திருந்தன. அப்போது தென்னிந்தி

யாவில் ஆறுகாடு நவாபு, நைஜாம் அரசர், ஐதர் சாயபு, மகாராஷ்டிரர் ஆகிய இவர்கள் பிரசித்திப் பெற்று இருந்தார்கள். இவர்கள் தங்களுக்குள் சண்டை யிட்டுக்கொண்டு இருந்தார்கள். இவர்களுக்கு இடையில் ஆங்கிலேயர்களும் இருந்து வந்தார்கள். ஆங்கிலேயர்களுக்கு அக்காலத்தில் நாட்டில் அதிக செல்வாக்கு இல்லை. ஆகவே அவர்கள் ஆறுகாடு நவாபினுடைய ஆதரவில் வாழ வேண்டியவர்கள் ஆனார்கள்.

இச்சமயத்தில் தரகு தொழில் நடத்தியவர்களுக்கு மிகவும் கொண்டாட்டமாய் இருந்தது. அவர்கள் ஏராளமான சொத்துக்களைச் சம்பாதித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது, ஆகவே அவர்கள், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக் கேற்பத் தங்களுக்குக் கிடைத்த நல்ல சமயத்தை, வீணாக்கிக் கொள்ளாமல், பணஞ் சம்பாதிப்பதிலேயே செலவழித்து வந்தார்கள்.

கிழக்கு இந்திய கம்பெனி ஜாகீராகிய பூவிருந்தவல்லி, திருப்பாச்சூர் முதலிய இடங்களில் முதலியார் கம்பெனியாருக்குப் பிரதிநிதியாக இருந்து வரிவசூல்செய்து அதிக இலாபத்தை அடைந்தார். பின்னும் முதலியார் ஆங்கிலேயர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையில் தூது சென்று அதனாலும் பெருத்த திரவியத்தைச் சம்பாதித்ததோடு கீர்த்தியையும் அதிகமாகச்

சம்பாதித்தார். பின்னும் பச்சையப்ப முதலியார் தஞ்சாவூருக்குச் சென்று தம்முடைய பெயராலும், பௌனி-நாராயணப் பிள்ளை அவர்களுடைய பெயராலும் 'ரொக்க லேவாதேவி' செய்து அதனாலும் திரண்ட ஐஸ்வரியத்தைத் திரட்டினர். இவ்வாறு இருக்கையில் தஞ்சாவூர் மன்னர் ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டிய தொகையைப் பலவிதமான நாணயங்களாகக் கொடுத்துவந்தார். அதனால் கம்பெனியாருக்குக் கஷ்டம் ஏற்பட்டது. இன்னும் அந்த அரசர் கம்பெனியாருக்குச் சேரவேண்டிய தொகையைச் சரிவர செலுத்தாமல் இருந்துவந்தார். ஆகவே பச்சையப்பர் தஞ்சாவூர் அரசரிடம் இருந்து நூற்றுக்குப் பத்து இருபது வீதம் வட்டம் தள்ளிப் பலவகையான நாணயங்களைத் தாம் வாங்கிக்கொண்டு அத்தொகைக்குப் பதிலாக அவர் கம்பெனியாருக்குப் பூவராகன்கள் கொடுத்து வந்தார். அதனாலும் பச்சையப்பருக்கு ஏராளமான திரவியம் சேர்ந்தது. இன்னும் பச்சையப்பர் தஞ்சாவூர் மன்னருக்கு அவர் விருப்பத்தின் மீது ஏராளமான தொகைகளைக் கடனாகக்கொடுத்து அவைகளுக்குப் பதிலாக அரசரின் நிலங்களையும், நகைகளையும் அடைமானமாக வைத்துக்கொண்டார். இதனாலும் பச்சையப்பருக்கு ஏராளமாகப் பொருள் கிடைத்தது. இன்னும் பச்சையப்பர் அக்காலத்தில் இருந்த குறுநிலமன்னர்களுக்கும், பாளை

யக்காரர்களுக்கும், பிறருக்கும் ஏராளமான தொகை களை வட்டிக்குக் கொடுத்து அவைகளின் மூலம் ஏராளமான பொருளைச் சம்பாதித்தார். தஞ்சாவூர் அரசர் பச்சையப்பருக்குத் தென்னங்குடி என்னும் சுரோத்திரிய கிராமத்தைக் கொடுத்தார். பச்சையப்பர் தஞ்சாவூரில் பெரியதொரு மாளிகையைக் கட்டிக் கொண்டு அதில் வாசஞ்செய்து வந்தார்.

முதலியாரவர்களுக்கு அநேக வருஷங்கள் வரையில் குழந்தை பிறக்கவில்லை. ஆகவே அவர் வேதாரணியம் என்னும் திவ்விய ஸ்தலத்தில் இருந்த ஒரு சோழிய வேளாளருடைய பெண்ணை இரண்டாந்தரம் விவாகஞ் செய்து கொண்டார். இந்தப் பெண்ணின் பெயர் பழநி ஆயி என்பதா கும். மறு மணத்தினுல் முதலியாருக்கு மனக் கவலை ஏற்பட்டதேயல்லாமல் மகிழ்ச்சி உண் டாகவில்லை. முதல் மனைவியும், இரண்டாம் மனை வியும் ஒற்றுமையாய் இராமல் தங்களுக்குள் அடிக் கடி சண்டை இட்டுக்கொண்டு வந்தார்கள்.

முதலியார் அவர்களும் தமது முதல் மனைவி யிடம் காட்டிய அவ்வளவு பட்சம் இரண்டாம் மனைவியிடம் காட்டவில்லை யென்று தெரிகிறது. முதலியாருக்கு இரண்டாம் மனைவி இடம் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையின் பெயர் சின்னுயி அம்மாள் என்பதாகும்.

## 3. வேறு பல விஷயங்கள்

பச்சையப்பமுதலியார் துவிபாஷித்தொழிலைச் செய்து ஏராளமான செல்வத்தைத் திரட்டிக் கொண்டு தென்னிந்தியாவுக்கே ஒரு நடு நாயகம் போல விளங்கி வந்தார். முதலியார் அவர்கள் தம்முடைய அந்தஸ்து உயர உயரத் தாம் தான தருமம் செய்வதிலும் உயர்ந்தவரானார். அவருடைய தான தருமங்கள் காசி முதல் இராமேஸ்வரம் வரையில் நடக்கும்படி அவர் ஏற்பாடுசெய்தார். இவ்வாறு இருக்கையில் அவர் சென்னைக்கு வந்து சென்னைக் கோமளீஸ்வரன் பேட்டையில் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு அதில் வசித்து வரலானார். பிறகு முதலியார் அவர்கள் தஞ்சையில் சில காலமும், சென்னையில் சிலகாலமுமாக இருந்து தம் தொழிலை நடத்தி வந்தார்.

இவ்வாறு இருக்கையில் முதலியாருக்குப் பல வீனங் காரணமாகத் தேகம் மெலிவுற்றுப் பாரிச வாய்வு, மதுமேக ரோகம் ஆகிய இவ்வியாதிகள் ஏற்பட்டன. பிறகு முதலியாரவர்கள் தமக்கு அந்திய காலம் கூடிய விரைவில் சம்பவிக்கக் கூடும் என்று உணர்ந்து தம்முடைய சொத்துக்களைத் தமக்குப்பின் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதைக் குறித்து ஓர் 'உயில்' எழுதினார். அந்த உயிலை எழுதிய பிறகு, சில தினங்களுக்குள், 1794-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந்தேதியில் முதலியா

ரவர்கள் திருவையாறு என்னும் திவ்விய க்ஷேத் திரத்தில் இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தார்.

முதலியார் அவர்கள் தம்முடைய உயிலில் பௌனி-நாராயணப்பிள்ளை அவர்களைத் தம் சொத் துக்களுக்கு 'எக்ஸிகியூட்டர்' என்னும் நிர்வா கஸ்தராக நியமித்திருந்தார். முதலியார் தம்மு டைய சொத்தில் தம் இரண்டாம் மனைவிக்கு ஒரு விதமான சுதந்தரமும் கொடுக்காமல் எல்லாச் சுதந் தரங்களையும் தம் முதல் மனைவிக்கும், தம் தமக்கை யாருக்குமே கொடுத்திருந்தார். ஆகவே முதல் மனைவிக்கும், இரண்டாம் மனைவிக்கும் இடையில் பெருத்த விவாதங்கள் ஏற்பட்டு மனஸ்தாபத்தை உண்டாக்கி வந்தன. இப்படியே இவர்களுக்குப் பிறகும் பச்சையப்ப முதலியாருடைய சொத் துக்கள் விஷயமாக அநேகம் வழக்குகள் ஏற்பட்டு வந்தன.

கடைசியில் வெம்பாக்கம், போலீஸ் இராக வாச்சாரியார், சர் ஹெர்பர்ட் காம்படன், ஜார்ஜ் நார்ட்டன் முதலிய புண்ணிய சீலர்களுடைய முயற்சியினால் கோர்ட்டார் பச்சையப்ப முதலியா ருடைய சொத்துக்கள் சம்பந்தமான விஷயத்தில் தலையிட்டு ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த உத்தரவுக் கிணங்கப் பச்சையப்ப முதலியாருடைய சொத்துக்களைப் பரிபாலிக்க ஒன்பது இந்திய கன

வான்கள் கொண்ட ஒரு தருமகர்த்தர் சபை ஏற்பட்டது. கடைசியில் பச்சையப்பருடைய சொத்துக்கள் சுமார் எட்டு இலட்சம் ரூபாய்கள் பெறுமானம் உள்ளதென்று மதிப்பிடப்பட்டது. அதில் தருமத்திற்காக நாலரை இலட்சம் போக மீதியிருந்த மூன்றரை இலட்சம் ரூபாயைக் கல்வி அபிவிருத்திக்கான விஷயங்களில் செலவழிக்கத் தருமகர்த்தர்கள் தீர்மானித்தார்கள்.

தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்திக்காக மிகவும் பாடுபட்டு உழைத்து வந்த ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் சமயம் நேர்ந்த போதெல்லாம் கல்வியின் அவசியத்தைப் பற்றி அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறிவந்தார். சென்னையின் கவர்னராயிருந்த 'எல்பின்ஸ்டன்' துரையவர்களும் இவ்விஷயத்தில் ஆதரவு காட்டினார். 1842ஆம் வருஷத்தில் பச்சையப்பன் மத்தியபாடசாலை என்ற பெயருடன் ஒரு கல்விச்சாலை சென்னையில் ஏற்பட்டது. அதில் முதலில் சம்பளம் வாங்காமலே இந்து மதத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வியைப் போதித்துக் கொண்டு வந்தார்கள். பிறகு சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்த பிள்ளைகளிடம் இருந்து சம்பளம் வாங்கலானார்கள். பிறகு அரசாங்க வித்தியா இலாக்கா சட்டங்களை அனுசரித்து எல்லாப் பிள்ளைகளிடம் இருந்தும் சம்பளம் வாங்கிவர ஆரம்பித்தார்கள்.

காஞ்சிப்புரம், சிதம்பரம் முதலிய இடங் களிலும் பச்சையப்பருடைய பெயரால் பாடசாலை கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. சென்னையில் பச்சையப்பர் கலாசாலைக்கென சிறந்த கட்டடம் ஒன்று இருக்கின்றது. அதன் மேல்மாடியின்முன் பெரியதொரு 'ஹால்' கட்டப்பட் டிருக்கின்றது. அந்த ஹாலின் முகப்பில் பச்சையப்பன் என்ற பெயர் பச்சை எழுத்துக்களில் எழுதப்பட்டிருக் கின்றது. பச்சையப்பருடைய பெயர் என்றும் பசுமையாகவே இருக்க ஆண்டவன் அருள் புரிக.

பச்சையப்பர் ஹாலில், சுவருகளில், அநேகம் படங்கள் மாட்டப்பட் டிருக்கின்றன. அவைகளில் ஒன்று பச்சையப்ப முதலியா ரவர்களுடைய படமாகும். அந்த ஹாலுக்குள் செல்பவர்கள் பச்சையப்பர் படத்தைக்கண்டு தாங்களும் அவரைப் போலவே பிரசித்தி அடைய முயற்சி செய்வார்கள் என்று நாம் கருதுகின்றோம்.

# 2. சர். தி. முத்துசாமி ஐயர்

## 1. பெற்றோர்களும், இளமைப் பருவமும்.

ஒவ்வொருவரும் முயற்சி உள்ளவராய் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் இந்த உலகத்தில் விருத்தி அடைவார்கள். முயற்சி இல்லாதவர்கள் ஒருபோதும் விருத்தி அடைய மாட்டார்கள். முயற்சி உள்ள தேசத்தார் மற்ற நாடுகளைத் தங்களுக்கு அடிமைப்படுத்தி அரசாளு கிறார்கள்.

முயற்சியின் அவசியத்தைக் கருதியே அவ்வையாரும், 'ஊக்கமது கைவிடேல்,' என்று கூறி இருக்கின்றார். இன்னும், 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்,' என்னும் வாக்கும் இங்குக் கவனிக்கத் தக்கது.

நம் இந்திய தேசத்திலும் அநேகர் முயற்சி யைக் கைக்கொண்டு விருத்தி அடைந்து இருக் கிறார்கள். அவர்களில் ஒருவரான சர். தி. முத்து சாமி ஐயர் அவர்களுடைய வரலாற்றைச் சிறுவர்க ளாகிய நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். ஆகவே அவரைக் குறித்து நான் உங்களுக்குச் சில விஷயங்கள் சொல்லு கிறேன் : அவைகளை நீங்கள் கவனமாய்க் கேட்டு மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களும் அவரைப்போல முன்னுக்குவர முயலுங்கள்.

முத்துசாமி ஐயர் அவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்த தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவாரூருக்கு அருகில் இருக்கும் உச்சுவாடி என்னும் கிராமத்தில் 1832-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 28-ஆம் தேதி பிறந்தார். அவருடைய தகப்பனார் பெயர் வேங்கட நாராயண சாஸ்திரியார் என்பது. சாஸ்திரியாரின் மனைவியார் எல்லா நற்குணங்களையும் கொண்டு விளங்கினார். வேங்கட நாராயண சாஸ்திரியாரும், அவருடைய மனைவியாரும் ஏழைகளா யிருந்தாலும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். வேங்கட நாராயண சாஸ்திரியாருக்குக் கண் பார்வை கொஞ்சம் குறைவு என்று தெரிகிறது.

வேங்கட நாராயண சாஸ்திரியாருக்கும், அவருடைய மனைவியாருக்கும் காலக்கிரமத்தில் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் ஒரு பிள்ளையின் பெயர் வைத்தியநாதசாமி ஐயர் என்பது; மற்றொரு பிள்ளையின் பெயர் முத்துசாமி ஐயர் என்பது. இவரே நமது சரித்திரத் தலைவரான முத்துசாமி ஐயர் அவர்களாவர்.

முத்துசாமி ஐயர் அவர்கள் சிறுவயதிலேயே தம் தகப்பனாரை இழந்தார். பிறகு அவருடைய தாயார் உச்சுவாடி கிராமத்தை விட்டுத் திருவாரூருக்கு வந்தார். அங்கே அந்த அம்மையார் தம்மால் கூடுமான அளவுக்குத் தம் இரண்டு பிள்ளை

களுக்கும் கல்வி கற்பித்தார். பிறகு முத்துசாமி ஐயரவர்கள் குடும்பத்தின் கஷ்டத்தை உத்தேசித்துப் படிப்பை நிறுத்திவிட்டு ஒரு கிராமக் கணக்குப் பிள்ளையினிடத்தில் ஒரு ரூபாய் சம்பளத்திற்கு வேலையில் அமர்ந்தார். இவ்வேலையில் நமது ஐயரவர்கள் தமது பன்னிரண்டாவது வயது வரையில் இருந்தார்.

முத்துசாமி ஐயர் கிராமக் கணக்குப்பிள்ளையினிடத்தில் குமஸ்தாவாக இருந்தபோது திருவாரூரில் முத்துசாமி நாய்க்கர் என்பவர் ஒருவர் தாசில்தாராக இருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஆகவே ஜனங்கள் அவரிடத்தில் அன்பு காட்டி வந்தார்கள். இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் பக்கத்துக் கிராமத்தில் உடைப்புகள் ஏற்பட்டன வென்று சமாசாரம் கிடைத்தது. அதை விசாரித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ள முத்துசாமி நாய்க்கர் விரும்பினார். அச்சந்தர்ப்பத்தில் தாலூகா கச்சேரியில் முத்துசாமி ஐயரைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. ஆகவே தாசில்தார் பக்கத்துக்கிராமத்திற்குச் சென்று உடைப்பு சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துவர ஐயரவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி முத்துசாமிஐயர் உடைப்பு ஏற்பட்ட கிராமத்திற்குச் சென்றார்; அங்கே நடந்தவைகளைக் கூர்மையாகக் கவனித்து அவைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய ஒரு திட்டத்தையும்

தயாரித்துத் தாசீல்தாரிடம் கொடுத்தார். முதலில் தாசீல்தார் ஐயர் கூறிய விஷயங்களை நம்பவில்லை. பிறகு அவர் தமது தலைமை குமஸ்தா தயாரித்த திட்டமும், ஐயரவர்களுடைய திட்டமும் சரியா யிருக்கக்கண்டு ஐயரவர்களுடைய புத்திசாலித் தனத்துக்காக அவரை மெச்சினர்.

ஒருநாள் ஒருபெரிய மிராசுதார் தாசீல்தாரிடம் வந்தார். அவர் தாம் 'கிஸ்தி' பணம் எவ்வளவு கட்டவேண்டு மென்று தாசீல்தாரைக் கேட்டார். தாசீல்தார் அதைப்பற்றி யோசித்தார். உடனே ஐயரவர்கள், அந்தப் பணக்காரருக்கு இருபது கிராமங்களில் இருந்த நிலத்துக்காக, அவர் எவ்வ ளவு தொகை கட்டவேண்டு மென்பதை ஒரு காசும் பிசகின்றிக் கணக்குப் புத்தகத்தைப் பார்க்கா மலே சொன்னர். இதனுலும் தாசீல்தாருக்கு ஐய ரவர்களிடம் ஏற்பட்ட பிரியம் அதிகரித்தது.

இவ்வாறு முத்துசாமி ஐயர் புத்திசாலியாய் இருந்ததைக் கண்டு அந்தத் தாசீல்தார் ஐயரவர் களை முன்னுக்குக் கொண்டுவர எண்ணினர்.

திருவாரூரில் சொக்கலிங்கம் என்னும் பெயர் உள்ள ஓர் உபாத்தியாயர் இருந்தார். அவர் ஒரு பள்ளிக்கூடம் வைத்திருந்தார். ஐயரவர்கள் தமக்கு ஓய்ந்தபோது அந்தப் பள்ளிக்கூடத்திற் குச் சென்று ஆங்கில எழுத்துக்களைக் கற்றுக் கொண்டதோடு ஆங்கிலத்தில் இரண்டொரு வார்த்

தைகளைச் சேர்த்துப் படிக்கவும் கற்றுக்கொண்டார். இவ்வாறு இருக்கையில் தாசீல்தார் தம் மருமகனுக்கும், ஐயருக்கும் இங்கிலீஷ் முதல் வாசக புத்தகத்தை வாங்கிக் கொடுத்து அதை அவர்களுக்குக் கற்பித்து வந்தார். பிறகு அவர்களே அப் புத்தகத்தைப் படித்து முடிக்கும்படி தாசீல்தார் சொல்லி விட்டார். பிறகு சில தினங்கள் கழித்துத் தாசீல்தார் முத்துசாமி ஐயரையும், தமது மருமகனையும் பாடம் சம்பந்தமாகப் பரீட்சை செய்தார். ஐயரவர்களே பரீட்சையில் சிறந்து விளங்கினார். அதைக்கண்ட தாசீல்தாருக்கு ஐயரவர்களிடத்தில் இன்னும் அதிக அன்பு ஏற்பட்டது. ஏற்படவே தாசீல்தார் ஐயரை நாகபட்டினத்தில் இருக்கும் 'வெஸ்லியன் மிஷன்' பாடசாலைக்கு அனுப்பினார். அங்கே ஐயரவர்கள் பதினெட்டு மாதகாலம் தங்கிப் படித்துக்கொண் டிருந்தார்.

## 2. ஐயரவர்களின் முன்னேற்றம்

ஐயாரவர்கள் நாகபட்டினத்தில் உள்ள வெஸ்லியன் மிஷன் பாடசாலையை விட்டுச் சென்னைக்கு வந்தார். வந்தவர் இப்போது பிரஸிடென்சி காலேஜ் என வழங்கும் இராஜதானிக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கலானார். முத்துசாமி ஐயர் சென்னையில் வாசித்துக்கொண் டிருந்தபோது அவருடைய கல்வி அபிவிருத்தி விஷயத்தில் இராஜா சர் மாதவராவும், சர் ஹென்றிமாண்ட்

கோமரி துரைமகனும் அதிக அக்கரை யெடுத் துக்கொண்டார்கள். அப்போது பிரஸிடென்ஸி காலேஜின் பிரின்ஸ்பாலா யிருந்தவர் மிஸ்டர் பவல் என்னும் துரைமகனாவர். அவர் தென் னிந்தியாவின் கல்வி அபிவிருத்திக்காக அதிக மாகப் பாடுபட்டார். அவர் முத்துசாமி ஐயருடைய விஷயத்தில் சிரத்தைகாட்டி அவரை முன்னுக்குக் கொண்டுவர முயற்சித்தார். ஐயரவர்கள் இதை யெல்லாம் கண்டு கர்வம் கொள்ளாமல் மேலும் மேலும் நன்றாகப் படித்துத் தம் ஆசிரியர்கள் சந்தோஷிக்கும்படி நடந்துகொண்டார்.ஐயரவர்கள் கல்லூரியில் இருந்தபோது வருஷந்தோறும் பரிசுகளும், ஸ்காலர்ஷிப்புகளும் பெற்று வந்தார். ஐயரவர்கள் சிறுவயது முதற்கொண்டே கணக்கில் கெட்டிக்காரரா யிருந்தார். பின்னும் அவருக்கு வான சாஸ்திரத்திலும், 'டிரிக்னமிட்ரி' என்ற சாஸ்திரத்திலும் விசேஷப்பயிற்சிஏற்பட்டிருந்தது. பவல்துரை அவர்கள் முத்துசாமி ஐயருக்கு வான சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளுவதில் இருந்த அக் கரையைப் பாராட்டி அவருக்குச் சில சமயங்களில் இரவு ஒன்பதுமணிவரையில் வானசாஸ்திரத்தைக் கற்றுக் கொடுப்பார். பிறகு பவல்துரை அவர்கள் ஐயரைத் தமது வண்டியிலேயே அழைத்துக் கொண்டுபோய் மைலாப்பூரில் ஐயரவர்கள் தங்கியிருந்த வீட்டில் விட்டு வருவார்.

முத்துசாமி ஐயர் இவ்வாறு இருந்துவருகையில் வித்தியா இலாகா சங்கத்தார், 'கெட்ட பழக்கங்களும் அவைகளை ஒழிக்கும் வழிகளும்,' என்ற வியாசத்தைத் திறமையாக எழுதுகிறவர்களுக்கு ஐந்நூறு ரூபா வெகுமதி கொடுக்கப்படு மென்று விளம்பரஞ் செய்தார்கள். அப்பரிசைப் பெறச் சென்னை மாகாணத்தைச்சேர்ந்த அநேக மாணவர்கள் போட்டி போட்டார்கள். அவர்களில் ஒருவர் நமது முத்துசாமி ஐயரவர்களாவர். ஐயரவர்களுடைய வியாசம் மற்றவர்களுடைய வியாசத்தைப் பார்க்கிலும் சிறந்ததாய் இருந்தது. ஆகவே அந்த ஐந்நூறு ரூபாய் வெகுமதி ஐயரவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த ஐந்நூறு ரூபாயையும் ஐயரவர்கள் தாம் இறக்கும்வரையில் பத்திரமாக வைத்திருந்தார். ஐயரவர்களுடைய வியாசத்தைப் படித்த நீதிபதி ஹாலோவே துரை அவர்கள் ஐயரை மிகவும் புகழ்ந்து பேசினார்கள்.

ஐயரவர்கள் நாம் மேற்கூறிய பரிசைப்பெற்ற விஷயம் அரசாங்க கெஜட்டில் வெளியாயிற்று. அதோடு அந்தக் கெஜட்டில் ஐயரவர்கள் அரசாங்கத்தில் எந்தவிதமான வேலையையும் செய்யச் சக்தியுள்ளவர் என்றும் எழுதப்பட்டிருந்தது.

ஐயரவர்கள் 'ஓதுவது ஒழியேல்' என்பதற்கு ஏற்றபடி எப்போதும் படித்துக்கொண்டே இருப்பார்.

முத்துசாமி ஐயரவர்கள் மிகவும் கெட்டிக் காரராயிருந்ததைப் பவல் துரையவர்கள் அறிந்தார் அல்லவா? ஆகவே அவர் ஐயரவர்களைச் சீமைக் குச் சென்று ஐ. சி. எஸ்., பரீட்சைக்குப் படித்து வரச் சொன்னார். ஆனால் அப்போது ஐயரவர்களுக் குக் கலியாணம் நடந்து இருந்தபடியாலும், குடும் பத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை அவருக்கு ஏற்பட்டு இருந்தபடியாலும் அவர் இங்கிலாந் துக்குச் செல்ல விரும்பவில்லை.

ஐயரவர்கள் பி. ஏ., படித்து முடித்தார். பிறகு அவர் பிரசிடென்ஸி காலேஜில் மாதம் ஒன்றுக்கு அறுபது ரூபாய் சம்பளத்தில் ஓர் உபாத்தியாய ராக நியமிக்கப்பட்டார். கொஞ்சகாலம் ஆனபிறகு ஐயரவர்கள் தஞ்சாவூர் கலெக்டர் ஆபீசில் 'ரிகார்டு' குமஸ்தாவாக நியமிக்கப் பட்டார். இந்த இரண்டு வேலைகளிலும் இருந்தபோது ஐயரவர்கள் தமது வேலைகளை தமது அதிகாரிகளின் இஷ்டத்திற்குத் தகுந்தபடி ஒழுங்காகச் செய்துவந்தார். அதனால் அதிகாரிகளுக்கு ஐயரிடத்தில் அதிக அன்பு ஏற்பட்டது. பிறகு கல்வி இலாகா தலைவரான சர் அலெக்ஸாண்டர் துரை அவர்கள் ஐயர் அவர் களைப் பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டராக நிய மித்தார். இந்த வேலையில் இருந்தபோது ஐயர் அவர்கள் தம்முடைய திறமையினால் கல்வி இலா காவில் அநேக சீர்திருத்தங்களைச் செய்தார்.

விஷயங்கள் இவ்வாறு இருக்கையில் அரசாங்கத்தார் 'பிளீடர்ஸ் டெஸ்ட்' என்னும் வக்கீல் பரீட்சை ஒன்றை ஏற்படுத்தினார்கள்; இந்தப் பரீட்சையில் தேறுகிறவர்கள் ஜில்லா கோர்ட்டுகளிலும், வேறு கோர்ட்டுகளிலும் சென்று வழக்குகளைப்பற்றி வாதிக்கலாம் என்றும் உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதனால் அநேகர் இப்பரீட்சைக்குச் சென்றார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் நமது ஐயரும், இரகுநாத ராயரும் ஆவர். ஐயர் முதலாவதாகவும், இரகுநாதராயர் இரண்டாவ தாகவும் பரீட்சையில் தேறினார்கள்.

பிறகு அரசாங்கத்தினர் ஐயர் அவர்களை நாளடைவில் ஜில்லா முனிசீப்பாகவும், டெபுடி கலெக்டராகவும், மாஜிஸ்ட்ரேட்டாகவும், சப் ஜட்ஜாகவும் நியமித்தார்கள். இவ்வேலைகளில் இருந்த போது ஐயர் அவர்கள் தமக்கு மேற்பட்ட அதிகாரிகள் தம்மை மெச்சும்படியாக நடந்து வந்தார். இதனாலும் அதிகாரிகளுக்கு ஐயர் அவர்களிடத்தில் விசேஷ மதிப்பு ஏற்பட்டிருந்தது.

ஐயரவர்கள் மாஜிஸ்ட்ரேட் அதிகாரத்துடன் கூடிய டெபுடி கலெக்டராகத் தஞ்சாவூரில் இருந்தார். அப்போது ஒரு பணக்காரர்மீது நம்பிக்கைத் துரோக வழக்கு ஒன்று ஏற்பட்டது. அந்த வழக்கு நமது ஐயரவர்களின் முன் விசாரணைக்கு வந்தது. அந்தப் பணக்காரருக்காகப் பிரபல பாரிஸ்ட

ரான ஒருவர் ஆஜரானுர். அவர் பெயர் 'ஜான் புரூஸ் நார்ட்டன்' என்பதாகும். அவர் ஐயர் அவர்களுடைய புத்திசாலித்தனத்தை மெச்சித் தாம் சென்னைக்குத் திரும்பி வந்தபோது ஐயர் அவர்களுடைய அறிவாற்றல்களைப் பற்றி அதிகாரிகளிடத்தில் புகழ்ந்து பேசினுர்.

## 3. ஐயர் அவர்களின் பெருமை

அரசாங்கத்தினர் ஐயர் அவர்களைச் சென்னையில் மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்தார்கள். அவ்வேலையில் இருந்தபோது ஐயர் அவர்கள் தமது வேலைகளைச் சரியாகச் செய்து வந்தார். இதனுல் அவரை அனைவரும் கொண்டாடினுர்கள்.

சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஒருவர் ஓர் இந்தியனை, அவன் தம்முடைய தோட்டத்தில் நுழைந்தமைக்காக, அடித்து விட்டார். அடிபட்ட அந்த இந்தியன் அந்த நீதிபதிமீது வழக்குத் தொடரச் சம்மன் அனுப்பவேண்டுமென்று 'மாஜிஸ்ட்ரேட்' முன்னிலையில் மனுச் செய்துகொண்டான். ஐயர் அவர்கள் அவனை அடித்த நீதிபதி குற்றவாளி என்று கருதி அந்த நீதிபதிக்குச் 'சம்மன்' பிறப்பித்தார். அப்போது முத்துசாமி ஐயருக்கு மேல் இருந்த மாஜிஸ்ட்ரேட் குற்றஞ் சாட்டப்பட் டிருப்பவர் ஐகோர்ட் நீதிபதியாய்

இருப்பதனால் அவரை நேரில் 'கோர்ட்டு'க்கு வர வழைத்து வழக்கை விசாரிக்க வேண்டாமென்று சொன்னார். அதற்கு முத்துசாமி ஐயர் சம்மதிக்க வில்லை. அவர் அந்த நீதிபதிக்கு நேரில் ஆஜராக வேண்டுமென்றார். நீதிபதி நேரில் ஆஜரானார்; வழக்கு நடந்தது. நீதிபதி குற்றவாளி என்று தீர் மானிக்கப்பட்டது. ஐயர் அவர்கள் அந்த நீதி பதிக்கு மூன்று ரூபாய் அபராதம் விதித்தார்.

ஐயர் அவர்கள் சென்னையில் மாஜிஸ்ட்ரேட் டாக இருந்து கொண்டே பி. எல்., பரீட்சைக்குப் படித்து அதில் முதலாவதாகத் தேறினார். பின்னர் அரசாங்கத்தினர் ஐயர் அவர்களைச் சென்னை 'ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக' நியமித்தார்கள். இவ்வேலையிலும் ஐயர் அவர்கள் பிறர் மெச்சும் வண்ணம் நடந்து கொண்டார்.

ஐயர் அவர்களுக்கு இளமையில் ஒருவர் நண்பராய் இருந்தார். அவர் வேறு ஒருவரிடத்தில் இருநூறு ரூபாய் கடன் வாங்கி இருந்தார். அதைத் திருப்பிக் கொடுக்க அவரால் முடியவில்லை. ஆகவே அவர்மீது வழக்கு முத்துசாமி ஐயர் அவர்க ளுடைய கோர்ட்டிலேயே தொடரப்பட்டது. ஐயர் அவர்களுடைய நண்பர் ஐயர் அவர்களைக் கண்டு தம்மீது கொண்டு வரப்பட்டுள்ள வழக்கைத் தள்ளிவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், ஐயர் என்ன செய்தார் தெரியுமா? வழக்கு

நடைபெற்றது. ஐயர் அவர்கள் அந்த வழக்கை முன் பின் தெரியாதவர்களுடைய வழக்கை நடத்துவதைப் போலவே சட்டப்படி நடத்தினார். அவர் தமது நண்பர் குற்றமுள்ளவர் என்று கண்டார். உடனே அவர் தமது நண்பருக்கு விரோதமாகத் தீர்ப்பு அளித்தார். அந்தத் தீர்ப்பின் படி ஐயர் அவர்களுடைய நண்பர் வாதிக்கு இரு நூறு ரூபாய் கொடுக்க வேண்டியவரானார். வாதி பணத்தை வசூலிக்க 'வாரண்ட்' பிறப்பிக்க வேண்டுமென்று ஐயரைக் கேட்டுக் கொண்டார். ஐயர் தம் நண்பருக்கு விரோதமாக 'வாரண்ட்' பிறப்பித்தார். எனினும் ஐயர் தம் நண்பருடைய ஏழ்மைக்கு இரங்கி அவர் கொடுக்க வேண்டிய இருநூறு ரூபாயைத் தாமே வாதிக்குக் கொடுத்துக் கடனைத் தீர்த்து வாரண்டை நீக்கினார். அதனால் அவருடைய நண்பர் சிறை புகாமல் தப்பினார்.

அரசாங்கத்தினர் ஐயர் அவர்களுடைய திறமையை மெச்சி அவருக்கு ஸி. ஐ. இ., என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். பிறகு அரசாங்கத்தினர் ஐயர் அவர்களைச் சென்னை 'ஐகோர்ட்' நீதிபதிகளில் ஒருவராக நியமித்தார்கள். இந்தப் பெரிய பதவியை வகித்த முதல் இந்திய நீதிபதி நமது ஐயர் அவர்களே யாவர். அப்போது இருந்த சென்னைக் கவர்னர் ஐயர் அவர்களைப் புகழ்ந்து பேசி இருக்கின்றார். மற்ற நீதிபதிகள் சிக்கலான

வழக்குகளை ஐயர் அவர்களுக்கே விட்டுவிடுவார்கள். ஐயர் வழக்குகளைப் பிறர் மெச்சும் வண்ணம் விசாரணை செய்வார். இதனாலும் அவருடைய பெயர் சீக்கிரத்தில் பிரபலம் அடைந்தது. ஐயர் அவர்கள் பதினைந்து வருஷத்திற்கு அதிகமாகவே நீதிபதியாய் இருந்தார். கொஞ்சக் காலம் ஐயர் அவர்கள் பிரதம நீதிபதியாகவும் வேலை பார்த்தார். ஐயர் அவர்களுடைய தீர்ப்புகள் சிறந்து விளங்கின. எத்தனை மாதமானாலும் ஐயர் அவர்கள் தாம் விசாரித்த வழக்கின் சாராம்சங்களை மறக்க மாட்டார். இதனால் ஐயர் அவர்களுடைய ஞாபக சக்தி செவ்வையாய் விளங்குகிறது.

ஐயர் அவர்கள் பொறுமையை ஆபரணமாகக் கொண்டு இருந்தார். அவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு உயர்ந்த எண்ணங்களோடு விளங்கினார். அவர் கர்வத்தை அறவே 'விட்டிருந்தார். பொறுமை, அடக்கம், பெரியோருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் முதலான குணங்களை அவர் கொண்டிருந்தார். அவருடைய உடையும் சாதாரணமானது. அவர் தமக்குப் பிறர் செய்த உதவியை ஒருபோதும் மறப்பது இல்லை. தமக்கு உதவி செய்த 'பவல்' துரை அவர்களை அவர் மறவாமல் போற்றி வந்தார்.

முத்துசாமி ஐயர் நியாய இலாக்காவில் அநேக சீர் திருத்தங்களைச் செய்தார். அவருடைய தீர்ப்பு

களில் அநேகம் இன்றைக்கும் எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. 'இந்துலா'வில் அவர் அநேகம் சீர் திருத்தங்களைச் செய்து இருக்கின்றார். எந்த வழக்கிலும் உண்மையைக் கண்டு பிடிக்கும் சக்தி ஐயருக்கு இருந்தது.

ஐயரவர்கள் சென்னை சர்வ கலாசாலை அங்கத்தினரா யிருந்து கல்வி சம்பந்தமாக அநேகம் வேலைகளைச் செய்தார். ஓராண்டு பீ. ஏ., பட்டதாரிகளுக்குப் பட்டம் அளிக்கும்போது ஐயர் பிரசங்கம் செய்து இருக்கிறார். தேகாப்பியாசம் மாணவர்களுக்கு மிகவும் அவசியம் அல்லவா ? அதற்காக ஐயர் அவர்கள் பாடுபட்டார். சுதேச பாஷைகளின் அபிவிருத்திக்காகவும் அவர் மிகவும் பாடுபட்டார். தேசீயக் கல்வியின் அவசியத்தைக் குறித்தும் அவர் பேசி இருக்கின்றார். மாணவர்கள் மேல் நாடுகளுக்குச் சென்று கல்வியை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டு மென்றும் அவர் கூறி யிருக்கின்றார். இந்தியர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதை அவர் கண்டித்துப் பேசி இருக்கின்றார். பெண் கல்வியின் அவசியத்தை அவர் தம் தேசமக்களுக்கு எடுத்து உரைத்து இருக்கின்றார். அவர் பால்ய விவாகத்தைக் கண்டித்தார் ; இளம் பெண்கள் விதவைகளானல் அவர்களுக்கு மறு விவாகம் செய்யலா மென்று அவர் கூறி இருக்கின்றார்.

ஒவ்வொருவரும் இறைவனை வழிபடவேண்டு மென்று அவர் வற்புறுத்தி இருக்கின்றார். சங்கீதத் தில் அவருக்கு விசேஷப் பிரியம் உண்டு. இவ் வளவு பெருமை பொருந்திய ஐயர் அவர்கள் 1895-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 25-ஆம் தேதி திடீ ரென்று நோய் வாய்ப்பட்டு இறைவன் திருவடியை அடைந்தார். அவர் இறந்ததைக் கேட்டவுடன் எல்லோரும் வருத்தப்பட்டார்கள்.

ஐயர் அவர்களை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும் என்று கருதிப் பரிசுத்தமான சல வைக் கல்லால் செய்யப்பட்ட ஐயரின் உருவம் ஒன்று சென்னை ஐகோர்ட்டின் முக்கியமான இடத் தில் வைக்கப்பட் டிருக்கின்றது. அவ்வுருவச் சிலை யைக் காணும் ஒவ்வொருவரும், 'ஐயர் அவர்களைப் போல நாமும் நடக்க வேண்டும்,' என்று நினைப் பார்களென நாம் நம்புகின்றோம்.

## 3. பூண்டி
# அரங்கநாத முதலியார்

### 1. பெற்றேரும், இளமைப் பருவமும்

சுமார் நூறு வருஷங்களுக்கு முன் சென்னையில் பூண்டி சுப்பராய முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பூண்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். ஆகவே அவரை ஜனங்கள் பூண்டி சுப்பராய முதலியார் என்று அழைத்தார்கள். அவர் மிகவும் நற்குணம் வாய்ந்தவர். அவருடைய மனைவியாரும் மிகவும் நல்லவர்; தம் கணவர் மனம் கோணுதவாறு நடந்து வந்தார். சுப்பராய முதலியார் ஆங்கில பாஷையைக் கற்று இருந்தார்.

பூண்டி சுப்பராய முதலியாருக்கு 1847-ஆம் வருஷத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பெற்றோர் அரங்கநாதன் என்று பெயரிட்டு அதை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். குழந்தையாகிய அரங்கநாதர் தம்முடைய மழலைச் சொற்களால் பெற்றோருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கி வந்தார். அரங்கநாதர் குழந்தைப் பருவத்தைக் கடந்து கல்வி கற்கும் வயதை அடைந்தார். அதைக்கண்ட அவர் தந்தையாராகிய சுப்பராய முதலியார் தாமாகவே தம் குமாரருக்குக் கல்வி

கற்பித்துவந்தார். அரங்கநாதரும் சிறுவயது முதற் கொண்டே புத்திசாலியாக வளர்ந்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில் சுப்பராய முதலியாரைச் சென்னை 'இரயில்வே கம்பெனி'யார் அவிநாசிக்கு மாற்றிவிட்டார்கள். ஆகவே அவர் உத்தியோகத்தின் பொருட்டு அவ்விடத்திற்குச் செல்ல வேண்டியவரானார். சுப்பராய முதலியார் தம் மனைவியாரோடும், அரங்கநாதரோடும் அவிநாசிக்குச் சென்றார்; அங்கு உத்தியோகம் பார்த்துக்கொண்டு இருந்தார். அவர் இவ்வாறு இருக்கையில் ஒருநாள் சில திருடர்கள் சுப்பராய முதலியார் தங்கி யிருந்த வீட்டிற்குள் நுழைந்தார்கள்; அங்கே இருந்த பொருள்களைக் கொள்ளையடித்தார்கள். அப்போது அவிநாசியில் கொள்ளைக்காரருடைய அக்கிரமம் பொறுக்கக் கூடியதாயில்லை. ஆகவே சுப்பராய முதலியார் தம் குமாரரை அழைத்துக்கொண்டு அவிநாசியைவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டார்.

பதின்மூன்றாம் வயது வரையில் அரங்கநாத முதலியார் வீட்டிலேயே படித்து வந்தார். பிறகு அவர் பச்சையப்பன் கலாசாலையில் நான்காம் பாரத்தில் சேர்ந்தார். அப்போது அக்கலாசாலையின் தலைவரா யிருந்தவர் 'பேசில் லவரி' என்பவர் ஆவர். அவர் அரங்கநாத முதலியாருடைய கல்வி அறிவைக் கண்டு அவரை மெச்சினார், அரங்கநாத முதலியாருக்கு அவர் நான்காம் பாரத்தில் படிக்கும்

போது வருடத்தில் அறுபது ரூபாய் பெறுவதற்கு 'ஸ்காலர்ஷிப்' ஒன்று கிடைத்தது. அரங்கநாத முதலியார் அவர்கள் நான்காவது பாரத்தில் முதலாவதாகத் தேறியபடியால் அவரைத் தலைமை ஆசிரியர் 'மெட்ரிக்குலேஷன்' வகுப்பில் சேர்த்தார். அந்த வகுப்பில் படித்துக்கொண்டு இருந்த போது முதலியார் அநேகம் பரிசுகளைப் பெற்றார். இராஜா சர் மாதவராயர் ஆங்கிலத்திலும், கணக்கிலும் தேர்ச்சி அடைகிறவர்களுக்கு ஒரு பரிசு ஏற்படுத்தி இருந்தார். அந்தப் பரிசை நமது முதலியார் அவர்கள் பெற்றார்.

பூண்டி அரங்கநாத முதலியார் சிறு வயது முதற்கொண்டே தன்னம்பிக்கை உள்ளவராய் இருந்தார்.

## 2. கல்வி அபிவிருத்தி

'விளையும் பயிர் முளையிலே' என்பது பழமொழி அல்லவா? அதற்கு ஏற்றபடி முதலியார் சிறுவயது முதற்கொண்டே புத்தி தீட்சண்யம் உடையவராய் இருந்தார். முதலியார் அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் படித்து வந்தார் அல்லவா? அவர் 1862-ம் வருஷத்தில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் சென்னை இராஜதானியில் முதலாவதாகத் தேறினார்.

59040

அப்போது பச்சையப்பன் கலாசாலையில் எப். எ., பி. எ., வகுப்புக்கள் இல்லை. ஆகவே முதலியார் அவர்கள் பச்சையப்பன் தரும பரிபாலனத்தைச் சேர்ந்த தருமகர்த்தர்கள் கொடுத்த ‘ ஸ்காலர்ஷிப்’பைப் பெற்றுப் ‘ பிரஸிடென்ஸி காலேஜில் ’ சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். அப்போது இந்தியச் சிறுவர்களின் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கம் கொண்டு இருந்த ‘எட்மண்ட் தாம்ஸன்’ அந்தக் காலேஜின் தலைவராய் இருந்தார். அவரும், மற்ற போதகாசிரியர்களும் அரங்கநாத முதலியாருடைய கல்வி அபிவிருத்தியைக் கண்டு அவரைக் கொண்டாடினார்கள். தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் சிரத்தை காட்டிய பவல் துரையும், நீதிபதிஹாலோவே துரையும் அரங்கநாத முதலியாருடைய கல்வி அபிவிருத்தி விஷயத்தில் உதவி செய்தார்கள். அரங்கநாத முதலியார் ஆங்கிலத்திலும் கணக்கிலும் அதிக புலமை அடைந்து இருந்தார். அவருடைய ஆங்கில பாஷா ஞானத்தை மெச்சி அநேகம் ஆங்கிலேயர்கள் அவரைப் பெரிதும் கொண்டாடினார்கள்.

நமது முதலியார் அவர்கள் 1865-ஆம் வருஷத்தில் பி. ஏ., பரீட்சையில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறினார். சென்னை, சர்வ கலாசாலை யார் வசம் திருவாங்கூர் மகாராஜாவாய் இருந்த

அப்போது பச்சையப்பன் கலாசாலையில் எப். ஏ., பி. ஏ., வகுப்புக்கள் இல்லை. ஆகவே முதலியார் அவர்கள் பச்சையப்பன் தரும பரிபாலனத்தைச் சேர்ந்த தருமகர்த்தர்கள் கொடுத்த 'ஸ்காலர்ஷிப்'பைப் பெற்றுப் 'பிரஸிடென்ஸி காலேஜில்' சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். அப்போது இந்தியச் சிறுவர்களின் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கம் கொண்டு இருந்த 'எட்மண்ட் தாம்ஸன்' அந்தக் காலேஜின் தலைவராய் இருந்தார். அவரும், மற்ற போதகாசிரியர்களும் அரங்கநாத முதலியாருடைய கல்வி அபிவிருத்தியைக் கண்டு அவரைக் கொண்டாடினார்கள். தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் சிரத்தை காட்டிய பவல் துரையும், நீதிபதிஹாலோவே துரையும் அரங்கநாத முதலியாருடைய கல்வி அபிவிருத்தி விஷயத்தில் உதவி செய்தார்கள். அரங்கநாத முதலியார் ஆங்கிலத்திலும் கணக்கிலும் அதிக புலமை அடைந்து இருந்தார். அவருடைய ஆங்கில பாஷா ஞானத்தை மெச்சி அநேகம் ஆங்கிலேயர்கள் அவரைப் பெரிதும் கொண்டாடினார்கள்.

நமது முதலியார் அவர்கள் 1865-ஆம் வருஷத்தில் பி. ஏ., பரீட்சையில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறினர். சென்னை, சர்வ கலாசாலையார் வசம் திருவாங்கூர் மகாராஜாவாய் இருந்த

யத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. அரங்க நாத முதலியார் தத்துவ சாஸ்திரத்திலும், தமிழி லும், கணக்கிலும், ஆங்கிலத்திலும் தமது காலத் தில் இருந்தவர்கள் எல்லோரிலும் தாம் மேலாக விளங்கினர். ஆங்கில நாடகங்களில் அவருக்குப் பிரியம் அதிகம். ஆகவே அவர் ஷேக்ஸ்பியர் மகா கவியின் நாடகங்களை ஓயாமல் படித்து வந்தார். தம் நண்பர்களுடன் சம்பாஷிக்கும் போதும் அவர் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப்பற்றிப் பேசுவார். ஜாண்மார்லி, லெஸ்லி ஸ்டீபன், லெக்கி, ரஸ்கின் முதலியவர்களுடைய வசன காவியங் களை அவர் அடிக்கடி படித்து வருவார். கம்ப ராமாயணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் ஆகிய இந் நூல்களில் அவருக்கு ஆயிரக் கணக்கான பாடல்கள் மனப்பாடம் உண்டு. முதலி யார் அவர்கள் ‘கச்சிக்கலம்பகம்’ என்னும் ஒரு செய்யுள் நூலைச் செய்திருக்கின்றார். ஆங்கிலத் திலும் தமிழிலும் பெரும் புலமை பெற்றிருந்த நமது முதலியார் அவர்கள் வேறு நூல்களைச் செய்யாமல் போனமை வருந்தத்தக்க விஷய மாகும்.

## 3. உத்தியோகம் வகித்தல்

முதலியார் அவர்கள் பி. ஏ., பரீட்சையில் சென்னை இராஜதானியில் முதன்மையாகத் தேறி

ஞர் அல்லவா? முதலியார் அவர்களுடைய அறி வாற்றல்களைக் கண்ட தாம்ஸன் துரையவர்கள் முதலியார் அவர்களைப் பிரஸிடென்ஸி காலேஜில் ஓர் உபாத்தியாயராக நியமித்தார். அக்காலத்தில் அரங்கநாத முதலியாரைப் போன்றவர்களுக்கு நாம் மேலே கூறிய உபாத்தியாயர் தொழிலைக் காட்டிலும் பொருள் அதிகம் வரக்கூடிய வேலை கிடைக்கக் கூடும். அநேகர், 'பெரிய உத்தியோகம் கொடுக் கிறோம்,' என்று முதலியாரைக் கூப்பிட்டார்கள். ஆனால் முதலியார் அவர்கள் அதை யெல்லாம் கவனியாமல் உபாத்தியாயராகவே இருக்கப் பிரி யப்பட்டார். பி. ஏ., பரீட்சையில் தேறிய ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவர் எம். ஏ., பரீட் சைக்குச் சென்று அதில் தேறினார். பிரஸிடென்ஸி காலேஜில் நிரந்தர கணித போதகாசிரிய ராவதற்கு முன் அவர் கும்பகோணம் காலேஜிலும், பல்லாரி பிரொவின்ஷியல் ஸ்கூலிலும் வேலை பார்த்தார். பிறகு அவர் பிரஸிடென்ஸி காலேஜில் நிரந்தர கணிதபோதகாசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் கணித சாஸ்திரத்தை மாணவர்களுக்குத் தெளிவாக வும், விளக்கமாகவும் சொல்லிக் கொடுத்தார். அத னால் அவரிடத்தில் மாணவர்களுக்கு அளவு கடந்த பிரியம் ஏற்பட்டது. 'பிரஸிடென்ஸி காலேஜ்' அபிவிருத்தி விஷயத்தில் அவர் அதிக பாடு பட்டார். 'பிரஸிடென்ஸி காலேஜ் ஹாஸ்டல்'

விஷயமாகவும் அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அதிகமாகும். அவர் கணித சாஸ்திர போதகாசிரியராக இருந்ததோடு, தர்க்கம் சரித்திரம் முதலிய பாடங்களைப் போதிப்பவராகவும் இருந்தார்.

அரங்கநாத முதலியார் அவர்கள் சென்னை, சர்வ கலாசாலைக்கு ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பிறகு அவர் வருஷந்தோறும் சர்வ கலாசாலையின் நிர்வாகச் சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தார். அவர் சர்வ கலாசாலையில் அங்கம் வகித்து அநேக நன்மையான காரியங்களைச் செய்தார். கல்வி சம்பந்தமாக அரசாங்கத்தார் ஏற்படுத்திய சங்கங்களிலெல்லாம் அவர் அங்கத்தினராக இருந்தார். அவருடைய அபிப்பிராயங்களை அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும், 'சிண்டிகேட்' மகா சபையினரும் கௌரவித்து வந்தார்கள்.

அரங்கநாத முதலியார் நகரபரிபாலன சபை அங்கத்தினராய் இருந்து ஜனங்களுக்கு அநேக நன்மைகள் செய்தார். 'காஸ்மா பாலிட்டன் கிளப்' அங்கத்தினராய் இருந்து அதன் அபிவிருத்திக்காகவும் முதலியார் பாடுபட்டார். சென்னை அரசாங்கத்தின் தமிழ் 'ட்ரான்ஸ்லேட்டர்' என்னும்

மொழி பெயர்ப்பாளர் பதவியை வகித்து அதிலும் நமது முதலியார் சிறந்து விளங்கினார். சென்னை நகரின் 'ஷெரிப்' பாகவும் முதலியாரவர்கள் இருந்தார்கள்.

அரங்கநாத முதலியார் அவர்கள் ஓர் ஆண்டு சர்வ கலாசாலைப் பட்டதாரிகளுக்கு உபந்நியாசம் செய்யும் பெருமையைப் பெற்றார். அப்போது அவர் செய்த உபந்நியாசம் விவேகத்துடன் கூடியதாய் இருந்தது. அந்த உபந்நியாசத்தைப்பற்றி ஐரோப்பியர்களும் இந்தியர்களும் புகழ்ந்து பேசினார்கள். நூதன இந்தியா பத்திரிகையின் ஆசிரியராகிய காட்டன் துரை அவர்கள் அந்த உபந்நியாசத்தைப் பற்றிக் கூறுகையில், 'சென்னையில் உள்ளவர்கள் மாத்திரமேயல்லாமல் இந்தியா முழுமையிலும் ஏன் இங்கிலாந்திலுள்ளவர்களுங்கூட அதை வாசிக்கவேண்டுமென்பது எனது வேண்டுகோளாகும்,' என்று கூறி இருக்கின்றார்.

அரங்கநாத முதலியார் அவர்கள் ஜனசார சீர்திருத்த விஷயமாகவும் பாடுபட்டார். அவர் மிகவும் இரக்கமுள்ள மனத்தை உடையவராய் இருந்தார். அவர் தம்முடைய வருமானத்தில் பெரும் பகுதியைத் தருமத்தில் செலவழிந்தார்; ஏழை மாணவர்களுக்குப் பொருளுதவி செய்துவந்தார்.

அவர் வலதுகை கொடுத்ததை அவர் இடதுகை அறியாது. வீண் பெருமைக்காக அவர் தருமஞ் செய்கிறவர் அல்லர். அவர் வீண் பெருமை கொஞ் சமும் இல்லாதவர். அவர் எளியவாழ்க்கையையும், மேலான எண்ணங்களையும் கொண்டு விளங்கினர். அவரிடத்தில் சோம்பலென்பது மருந்துக்கும் கிடையாது. எப்போதும் சிறு பிள்ளையைப் போலவே அவர் சுறு சுறுப்பாகக் காரியங்களைச் செய்வார். பிறரிடம் காணப்படும் நற்குணங்களை யும், சாமர்த்தியங்களையும் அவர் மெச்சுவார்.

அரங்கநாத முதலியார் சிறந்த பரம்பரையில் பிறந்தவராவர். அவர் பலவிதமான அருங்குணங் களைக் கொண்டிருந்தார். அவர் தம் கடமைகளைச் செய்யச் சிறிதும் பின்வாங்க மாட்டார். அவர் எப் போதும் புத்தகமும் கையுமாகவே இருப்பார். அவ ருக்குப் படிப்பில் சலிப்பென்பதே கிடையாது.

அரங்கநாத முதலியார் தாம் இறக்கும் வரை யில் திடகாத்திரராய் இருந்தார். தாம் இறப்பதற்கு நான்கு தினத்திற்கு முன்வரையில் அவர் காலே ஜுக்குப் போய்வந்தார். அவருக்குத் திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டது. அந்தக் காய்ச்சல் அவருக்கு மரணத்தை யுண்டாக்கும் என்று யாரும் எண்ண வில்லை. ஆனல் கடவுளுடைய சித்தம் வேறுவித

மாய் இருந்தது. 1893-ஆம் வருஷம் அரங்கநாத முதலியார் தமக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாய் எல்லோரும் வருந்த இறைவனை அடைந்தார். இந்திய ஜனங்கள் அனைவரும் அவர் மரணத்திற்காகப் பெரிதும் வருந்தினார்கள். ஐரோப்பியர்களும் அவர் மரணத்தைக் கேட்டுப் பெரிதும் துக்கப்பட்டார்கள்.

முதலியாருடைய மரணத்துக்கு வருந்திப் பிரஸிடென்ஸி காலேஜ் கவுன்ஸிலைச் சேர்ந்தவர்களும், கல்வி இலாக்கா தலைவரான 'டாக்டர் டங்கன்' துரை அவர்களும், டாக்டர் மில்லர் துரை அவர்களும், சர். முத்துசாமி ஐயர் அவர்களும் தங்களுடைய வருத்தத்தை முதலியாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்தார்கள்.

59040

முற்றிற்று

Tirupati Sri Mahant's Press, Madras.